This Question Paper consists of 37 questions [Section-A (19) + Section-B (9+9)] and 8 printed pages.
8 பக்கங்களை கொண்ட இவ்வினாத்தாளில் 37 வினாக்கள் உள்ளன. [பகுதி அ - (19), பகுதி ஆ-(9+9)]

**Sl. No.**

**Roll No.** (ரோல் நம்பர்) | | | | | | | | | | | | |

**Code No. 60/SS/A/TM**

**Set / செட் A**

# (தமிழ்)
# TAMIL
# (304)

தேர்வு நடைபெறும் நாள் மற்றும் தேதி : ____________________

தேர்வு மேற்பார்வையாளர் கையொப்பம் **1.** ____________________

**2.** ____________________

பொதுக்குறிப்புகள் :

1. தேர்வு எழுதுவோர் தங்களின் வரிசை எண்ணை (Roll No.) வினாத்தாளின் முன்பக்கம் எழுத வேண்டும்.

2. வினாத்தாளில் கொடுக்கப்பட்டுள்ள வினாக்களின் எண்ணிக்கையும் வினாத்தாளின் முன்பக்கம் அச்சாகியுள்ள வினாக்களின் எண்ணிக்கையும் மொத்த பக்கங்களின் எண்ணிக்கையும் சரியாக உள்ளனவா என்பதையும் அனைத்து வினாக்களும் வரிசையாக உள்ளனவா என்பதையும் சரிபார்க்கவும்.

3. வினாத்தாளில் ஏதேனும் அடையாளக் குறிகள் இட்டாலோ அல்லது தேர்வு எழுதுபவர் தனது எண்ணை அதற்கென ஒதுக்கப்படாத இடத்தில் எழுதினாலோ தேர்வு எழுதுபவர் தேர்வு எழுதும் தகுதியை இழக்க நேரிடும்.

4. உங்களது வினாத்தாளின், எண் 60 / SS / A / TM மற்றும் செட் A எண்ணை விடைத்தாளில் எழுதுங்கள்.


UNNATI EDUCATIONS
9899436384, 9654279279

# (தமிழ்)
# (TAMIL)
# (304)

காலம் : 3 மணி] [மொ. மதிப்பெண் : 100

*அறிவிப்பு :*

(1) இந்த வினாத்தாள் பகுதி 'அ' மற்றும் பகுதி 'ஆ' என்னும் இரு பகுதிகளைக் கொண்டுள்ளது.

(2) பகுதி 'அ' வில் உள்ள எல்லா வினாக்களுக்கும் தவறாமல் விடையளிக்க வேண்டும்.

(3) பகுதி 'ஆ' வில் இரண்டு விருப்பப் பாடங்கள் உள்ளன. தேர்வாளர் இவற்றில் தங்களுக்குரிய ஒரு விருப்பப் பாடத்தின் வினாக்களுக்கு விடையளிக்க வேண்டும்.

(4) வினாக்களுக்குரிய மதிப்பெண் அவ்வவ் வினாவிற்கு எதிரே குறிப்பிடப்பட்டுள்ளது.

## *பகுதி - அ*

**குறிப்பு* : எல்லா வினாக்களுக்கும் விடையளிக்கவும்

*ஓரிரு சொற்களில் விடை தருக :* **[17 × 1 = 17]**

**1.** நாலடியார் பாடல்களை எழுதியவர் யாவர் ? **[1]**

**2.** காட்டிலிருந்து வெளிவந்த புறாக்கள் எவை போல இருந்ததாய் பாரதிதாசன் கூறுகின்றார் ? **[1]**

**3.** மூன்று தமிழையும் ஓதியவர் யார் ? **[1]**



**UNNATI EDUCATIONS**
**9899436384, 9654279279**

4. கண்ணகியின் சிலம்பு ................ பறல்களைக் கொண்டிருந்தது ? [1]

5. சடைக்கால் - இச் சொல்லின் பொருள் யாது ? [1]

6. பாவை எந்தத் தெய்வத்தின் வடிவம் ? [1]

7. 'அகம்' என்பது எதனைக் குறிக்கும் ? [1]

8. 'கலைச் சொல்' - பொருள் தருக [1]

9. ஔவையார் எதனை மிகவும் கொடியது என்கின்றார்? [1]

10. அரவிந்தர் ஆசிரமம் எந்த நகரில் அமைந்துள்ளது ? [1]

11. பாட்டும் தொகையுமாக அமையும் நூலை எப்பெயரால் அழைப்பர் ? [1]

12. மகர ஈற்றுப் புணர்ச்சிக்கு ஒரு சான்று தருக. [1]

13. உடம்படாத இரு உயிர்மெய் எழுத்துகளை உடம்படுத்த வரும் மெய் .............. எனப்படும். [1]

14. 'கூலிக்கு உழைத்தான்' - இதில் வந்துள்ள வேற்றுமை ----வேற்றுமை ஆகும்.[1]



UNNATI EDUCATIONS
9899436384, 9654279279

**15.** பெயர் வினைகளின் பண்பை உணர்த்தி அவற்றுக்கு உரிமை பூண்டு நிற்பன ........ ஆகும். **[1]**

**16.** வயலும் வயல் சார்ந்த இடமும் ........ நிலம் என வழங்கப்பட்டது. **[1]**

**17.** MULTI MEDIA - இச் சொல்லுக்கான தமிழ்ச் சொல் யாது ? **[1]**

**18.** **(அ)** *எவையேனும் மூன்று வினாக்களுக்கு விடையளிக்கவும்.* **[3 × 4 = 12]**

(a) முக்கூடற் பள்ளு - குறிப்பு வரைக.

(b) முருகனின் பெருமைகளாக தமிழ் விடு தூது கூறுவன யாவை ?

(c) பந்தியந்தரு என்ற பாடலை அடிபிறழாமல் எழுதுக.

(d) தோழியின் கடமையுணர்வை நற்றிணை பாடல் வழி விவரி.

**(ஆ)** *எவையேனும் மூன்று வினாக்களுக்கு விடையளிக்கவும்.* **[3 × 4 = 12]**

(a) பாழ் என்பது எதனைக் குறிக்கின்றது ?

(b) தமிழ் மொழியின் சிறப்புகளை எழுதுக.

(c) மனித நேயம் அன்பால் வளர்கின்றதா ?

(d) இசைக்கலையின் சிறப்புகளைக் குறிப்பிடுக.



UNNATI EDUCATIONS
9899436384, 9654279279

**(இ)** *எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடையளிக்கவும்.* **[2 × 4 = 8]**

(a) முத்துலெட்சுமி அம்மையார் பெண்களுக்காக உருவாக்கிய சட்டங்கள் யாவை ?

(b) நூல் நிலையங்களின் பயன்கள் யாவை ?

(c) பேச்சுத் தமிழுக்கும் எழுத்துத் தமிழுக்கும் உள்ள வேறுபாடுகளை எழுதுக.

**19.** * *குறிப்பு : ஒரு பக்க அளவில் விடையளிக்க.*

**(அ)** *எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடையளிக்க.* **[2 × 6 = 12]**

(a) நற்றிணை பாடல் மூலம் பெண்ணுரிமைச் சிந்தனைகளை விளக்குக.

(b) செய்யாதன செய்வோம் என்ற பாடலின் பொருளை எழுதுக.

(c) உண்டாலம்ம இவ்வுலகம் - விளக்குக.

(d) வலி வகைகளைக் குறிப்பிடுக.

**(ஆ)** *எவையேனும் மூன்று வினாக்களுக்கு விடையளிக்க.* **[3 × 6 = 18]**

(a) பழந்தமிழரின் நகரமைப்பு கட்டடங்கள் பற்றி எழுதுக.

(b) கதவு சிறுகதை மூலம் அறியும் வாழ்வியல் உண்மைகளைக் கூறுக.

(c) தமிழ் உலகச் செம்மொழி என்பது குறித்து எழுதுக.



UNNATI EDUCATIONS
9899436384, 9654279279

(d) கோயில்கள் வளர்க்கும் மனங்கவர் கலைகள் பற்றி எழுதுக.

(e) பூனைக்குப் பால் கொடுக்காததற்குத் தெனாலிராமன் அரசரிடம் கூறிய காரணங்கள் யாவை ?

(f) தமிழர் ஆடற்கலையின் சிறப்பினை எடுத்துரைக்க.

**(இ)** எதேனும் ஒரு வினாவிற்கு விடையளிக்கவும். **[1 × 6 = 6]**

(a) தன் விவரக் குறிப்பு - படிவம் ஒன்றை எழுதுக.

(b) சிதம்பரம் சாயாவனத்தை விலைக்கு வாங்கிய நோக்கத்தைக் கூறுக.

பகுதி - ஆ

விருப்பப் பாடம் - I

**(இணையமும் தமிழும்)**

**20.** மெயில் பாக்ஸ் என்பது **[1]**

(a) புத்தகம்

(b) மின்பொறி

(c) மின்னஞ்சல் பெட்டி

(d) விளையாட்டுப் பெட்டி



**UNNATI EDUCATIONS**
**9899436384, 9654279279**

21. மதுரை திட்ட நூலகம் யாரால் தொடங்கப்பட்டது ? [1]

22. ஆளில்லா மின் நூலகம் எந்த நேரத்தில் செயல்படும் ? [1]

23. MAIL CLIANT - என்பதன் தமிழ்ச் சொல் என்ன ? [1]

24. மின்னஞ்சல் முகவரி பெற ஆதாரமானவை எவை ? [1]

*குறிப்பு : ஏதேனும் ஒரு வினாவிற்கு விடையளிக்க.* [1 × 4 = 4]

25. முகவருக்கான தொழில் நுட்பத் திறன் பற்றி விளக்குக.

26. மின்னஞ்சலின் சிறப்புகள் யாவை ?

*குறிப்பு : ஏதேனும் ஒரு வினாவிற்கு விடையளிக்க.* [1 × 6 = 6]

27. முகவருக்கு வேண்டிய பேச்சுத்திறன் எத்தகையது ?

28. விசைப்பலகை இயக்கி என்றால் என்ன ?

*விருப்பப் பாடம்* - II

*(மேலாண்மை இயலும் தமிழும்)*

20. அசைவு என்றால் என்ன ? [1]

21. கடிதம் என்பது யாது ? [1]



UNNATI EDUCATIONS
9899436384, 9654279279

22. LSRW என்றால் என்ன ? [1]

23. பங்கேற்பாளர் நிகழ்வுக் குறிப்பின் எப்பகுதியில் கையெழுத்திட வேண்டும்? [1]

24. ஒரு நிறுவனத்தின் உயிர்நாடியான துறை எது. [1]

*குறிப்பு : ஏதேனும் ஒரு வினாவிற்கு விடையளிக்க.* [1 × 4 = 4]

25. நிகழ்வுக் குறிப்பு தயாரிப்பு மாதிரியை வரைக.

26. அலுவலகத்தின் செயல்பாடுகளை விளக்குக.

*குறிப்பு : ஏதேனும் ஒரு வினாவிற்கு விடையளிக்க.* [1 × 6 = 6]

27. நிறுவன மேலாண்மை குறித்து விவரி.

28. கடிதத்தின் அமைப்பு பற்றி எழுதுக.

• • •



UNNATI EDUCATIONS
9899436384, 9654279279